**செய்தி வெளியீடு எண்: 836** **நாள்: 26.11.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழக அரசு, சமூக நலத் துறை மூலம் மூத்த குடிமக்கள் பாதுகாப்புடனும் மரியாதையுடனும் வாழத் தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து மூத்த குடிமக்கள் பயனடையும் வகையில் முதியோர் ஓய்வூதியம், முதியோர் இல்லங்கள் , ஒருங்கிணைந்த வளாகங்கள், நடமாடும் மருத்துவ மையங்கள், பிசியோதெரபிக் கிளினிக் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

மூத்த குடிமக்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007 தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு அதற்கேற்ப விதிகளும் வகுக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

மேலும், முதியோர்களுக்கு தேவையான உதவிகளைப் பெற கட்டணமில்லா உதவி எண்ணாக **சென்னைக்கு** மட்டும் **1253** என்ற எண்ணும் மற்றும் சென்னை தவிர **பிற மாவட்டங்களுக்கு** **1800–180–1253** என்ற எண்ணும் பொது சேவை எண்ணாக ஹெல்ப் ஏஜ் இந்தியா என்ற தொண்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முதியோர்களும் பயனடையும் நோக்கில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ஆணையின் படி, மூத்த குடிமக்களின் பிரச்சனைகள் மற்றும் குறைகளை தெரிவித்து உதவிகள் பெற கூடுதலாக கீழ்காணும் முதியோர்களுக்கான உதவி எண் அறிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **தொலைபேசி எண் :** | **044 – 24350375** |
| **அலைபேசி எண்** | **: 93612 72792** |

முதியோர்களின் அனைத்து தேவைகள் மற்றும் குறைகளை தெரிவிப்பதற்கு மேற்படி உதவி எண்களை தொடர்பு கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**